தமிழ்நாடு மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்குநரின் செயல்முறைகள் – சென்னை – 6

ஓ.மு.எண். 3048/அ1/2022 நாள்.08.08.2022

----------

பொருள் : பள்ளிக் கல்வி – மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்ககம் – மதுரை உலகத் திருக்குறள் பேரவை – 2022 – 2023 ஆம் கல்வியாண்டில் திருக்குறள் தேர்வு போட்டியில் மெட்ரிகுலேசன் / மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளியில் விருப்பமுள்ள மாணவர்கள் கலந்து கொள்ள அனுமதி அளித்தல் – சார்பு.

பார்வை : மதுரை, உலகத் திருக்குறள் பேரவையின் தேர்வு செயலரின் கடிதம் நாள். 25.07.2022.

----------

பார்வையில் காணும் மதுரை, உலகத் திருக்குறள் பேரவையின் தேர்வு செயலர் பள்ளி மாணவ/மாணவிகளுக்கு திருக்குறள் போட்டித் தேர்வில் கலந்து கொள்ள அனுமதி வழங்குமாறு கோரியுள்ளார்.

பார்வையில் குறிப்பிட்டுள்ள மதுரை, மாநில திருக்குறள் தேர்வு போட்டியில் விருப்பமுள்ள மாணவ / மாணவிகளை கலந்து கொள்ள அனுமதிக்க மெட்ரிகுலேசன் / மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளி முதல்வர்களுக்கு அறிவுறுந்துமாறு அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேலும், இப்போட்டி நடத்துகையில் மாணவ/மாணவியரின் பாதுகாப்பினை உறுதி செய்யவும், மாணவர்களை போட்டியில் கலந்து கொள்ள கட்டாயப்படுத்துதலை தவிர்க்கவும், தக்க அறிவுரை வழங்க முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கு தெரிவிக்கலாகிறது.

8/8/2022

மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்குநர்

பெறுநர்

அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்.

08/08/2022

நகல்

தேர்வுச் செயலர்,

உலகத்திருக்குறள் பேரவை,

55, டி.எஸ்.பி நகர், 2வது தெரு,

புறவழிச் சாலை, மதுரை . 625 010.



✆ 0452 - 2386238

# உலகத் திருக்குறள் பேரவை

(தமிழக அரசின் அனுமதி பெற்றது)
55, டி.எஸ்.பி. நகர், 2வது தெரு, புறவழிச்சாலை,
மதுரை - 625 010.

மதுரைத் திருக்குறள் பேரவை படிப்படியாக டிஜிட்டல் மயமாக்கப்படுவதால் இந்தக் கல்வி ஆண்டு முதல் முடிந்த அளவு மாணவர் பெயர் பட்டியலை எக்சல் (MS Excel) முறையில் வரிசை எண் மற்றும் மாணவர் பெயரை வகுப்புவாரியாக இந்த மின்னஞ்சலில் அனுப்பவும்.

**maduraithirukkuralperavai@gmail.com**

மின்னஞ்சலில் அனுப்ப இயலாதவர்கள் மாணவர் பெயர் பட்டியலை தபால் மூலமாக பேரவை அலுவலக முகவரிக்கு அனுப்பவும்.

**AKS Thirumavalavan**
**55, DSP Nagar, 2nd Street,**
**By pass Road, Madurai - 625 010.**
**Office : 0452 - 2386238**

---

குறிப்பு : கொரோனாவை முன்னிட்டு (2020 - 21) (2021 - 22) இரண்டு கல்வி ஆண்டுகள் திருக்குறள் தேர்வு நடைபெறவில்லை. நடப்பு கல்வி ஆண்டு (2022 - 23) முதல் திருக்குறள் தேர்வு நடைபெற இருப்பதால் தாங்கள் மீண்டும் தொடர்ந்து ஆதரவு தரும்படி கேட்டுக் கொள்கிறேன்.

---

**திருக்குறள் தேர்வு முடியும் வரை இத்தகவலறிக்கையை பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும்.**